செ.வெ.எண்: 94 நாள்: 31.08.2016

**புதுக்கோட்டை மாவட்டத்தில் தமிழகஅரசு நடத்தும் குரூப்-4 போட்டித்தேர்வுக்கான இலவச பயிற்சி வகுப்பினை அனைவரும் முறையாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும் - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

புதுக்கோட்டை மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலக கூட்டரங்கில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையின் சார்பில் குரூப்-4 போட்டித்தேர்வுக்கான இலவச பயிற்சி வகுப்பு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (31.08.2016) நடைபெற்றது.

இந்த குரூப்-4 போட்டித்தேர்வுக்கான இலவச பயிற்சி வகுப்பினை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் துவக்கி வைத்து போட்டி தேர்வர்களுக்கு இலவச பயிற்சி கையேட்டினை வழங்கி பேசியதாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையின் சார்பில் பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறார்கள். இதன்படி தமிழகஅரசு நவம்பர் 2016 மாதம் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் நடைபெறவுள்ள குரூப்-4 போட்டித்தேர்வுக்கு தேர்வர்கள் தயாராகும் வகையில் இலவச பயிற்சி வகுப்புகள் நடத்த உத்தரவிட்டுள்ளது. அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் குரூப்-4 போட்டித்தேர்வுக்கான இலவச பயிற்சி வகுப்பு துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

இந்த இலவச பயிற்சி வகுப்பு திங்கள் முதல் வெள்ளி வரை காலை 10.00 மணி முதல் மதியம் 2.00 மணி வரை தொடர்ந்து 25 நாட்கள் (100 மணிநேரம்) நடைபெறும். இப்பயிற்சி வகுப்பில் தமிழ், கணிதம், வரலாறு, புவியியல், அரசியல் அமைப்பு, அறிவியல், பொருளியல் மற்றும் நடப்பு செய்திகள் போன்ற போட்டித்தேர்வுக்குரிய பல்வேறு பிரிவுகளில் பயிற்சி அளிக்கப்படும். மேலும் தேர்வர்களுக்கு இலவச கையேடுகள், மாதிரி வினாக்கள் மற்றும் நூலகத்திலிருந்து தேவையான தேர்வு சம்மந்தப்பட்ட குறிப்புகளும் வழங்கப்படும்.

மேலும் இப்பயிற்சி வகுப்பினை அனுபவமிக்க ஆசிரியர்கள் மற்றும் போட்டித்தேர்வில் வெற்றி பெற்று அரசுப்பணியில் உள்ள அலுவலர்களைக் கொண்டும் சிறப்பாக நடத்தப்படும். எனவே நமது மாவட்டத்திலுள்ள 10ம் வகுப்பு தேர்ச்சி பெற்ற அனைத்து நபர்களும் இந்த இலவச பயிற்சி வகுப்பில் பங்கேற்று நன்கு பயின்று நடைபெறவுள்ள குரூப்-4 போட்டித்தேர்வில் வெற்றி பெற்று நமது மாவட்டத்திற்கு சிறப்பாக சேவையாற்ற வேண்டும் என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர்கள் திரு.விருத்தபுரி, திரு.அடைக்கண், ஊராட்சி மன்றத்தலைவர் திரு.ஜான்கென்னடி, ஆசிரியர்கள் மற்றும் பயிற்றுநர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**